1994 ஜனவரி 4]

சுற்றுலாப் பயணிகள், அவர்களுடைய சுவைகளுக்கு ஏற்ப தமிழ்நாடு ஓட்டல்கள் அந்த சுற்றுலாப் பயணிகளினுடைய சுவைகளுக்கு ஏற்ற உணவுகளை வழங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை, தமிழ்நாடு ஓட்டல்களுக்கு வரும் சுற்றுலா பயணிகளும் விரும்பி விண்ணப்பிப்பார்களேயானால், தமிழ்நாடு ஓட்டல்கள் மூலம் அத்தகைய உணவுகள் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்படும். அதேபோல் தமிழ்நாடு ஓட்டல்களில் தங்கும் அனைவருக்கும் வழங்க அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் இந்த இயற்கை உணவில் மிகுந்த விழிப்புணர்வு இருப்பதால் நம்முடைய தீவுத் திடலில் இருக்கிற தமிழ்நாடு உணவு விடுதியில் பரிட்சார்த்த முறையாக, சோதனை முறையில் இந்த இயற்கை உணவு பிரிவு தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீவுத் திடலில் மட்டுமல்ல, தமிழ் நாடு முழுவதும் இருக்கிற தமிழ்நாடு ஓட்டல்களில் அங்கே வருகிற பயணிகள் முன்னேற்பாடாக கொடுக்கிற ஆர்டர்களை வைத்து உணவு வழங்கப் படுகிறது. தீவுத் திடலில் மாண்புமிகு உறுப்பினரைப் போன்று வருகிற பயணிகளும் கோரிக்கை வைப்பார்களானால் அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

141 —

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் நீதிமன்ற கட்டணத் தாள்கள் தட்டுப்பாடு.

**** 11540***—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் - அண்ணா மாவட்டத்தில் ஒரு ரூபாய் முதல் ஐந்து ரூபாய் வரையுள்ள கோர்ட் ஸ்டாம்பு மற்றும் கோர்ட் ஸ்டாம்ப் பேப்பர்களுக்கு அடிக்கடி தட்டுப்பாடு ஏற்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், சலான் மூலம் குறிப்பிட்ட தொகையினை செலுத்த அரசு வழிவகை செய்ய முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): நீதிமன்ற கட்டணத் தாள்கள் மற்றும் நீதிமன்ற வில்லைகள் சரியாக உரிய நேரத்தில் கிடைக்காதபோது அதற்கான

கட்டணத்தை நீதிமன்ற அலுவலகங்களில் ரொக்கமாக செலுத்தி உரிய சலான்களுடன் மனுக்களை இணைத்திடும் கருத்துருவை சில நடைமுறை இடர்பாடுகளை முன்னிட்டு உயர்நீதி மன்றம் ஏற்கவில்லை. எனினும் நீதிமன்ற வில்லைகள் மற்றும் நீதிமன்ற கட்டணத் தாள்கள் போதுமான அளவில் கையிருப்பில் வைத்துக் கொள்வதற்கு மாவட்ட ஆட்சியாளருக்கு அறிவுரைகள் வழங்க தக்க நடவடிக்கை தனியாக எடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் *11.15*

157—

மயிலாடுதுறை பெண்கள் கல்லூரியில் புதிய பட்ட வகுப்புகள் தொடங்குதல்

***16768**—திரு. எம். எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை பெண்கள் கல்லூரிக்கு புதியதாக பி.காம் மற்றும் பி.எஸ்.சி., (வேதியல்) பட்ட வகுப்புகள் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம், எனில், எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும் ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(இருபத்தேழாம் பட்டியல்)

1—

திண்டுக்கல் நகரைச் சுற்றி வீட்டுமனைகள் ஒப்படை செய்வதற்கு தடை ஆணை.

வினா எண். 8387—திருமதி பி. நிர்மலா . மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—